2

M. சிபர்நாதன்.

# ஆயக்குடி மரத்தடி இலவச பயிற்சி மையம்

## TNPSC GROUP 1, 2, 4 & SI, POLICE தேர்வு

நாள்: 29-11-2020 நேரம் : காலை 10.00 மணி

இடம் : பழைய ஆயக்குடி, பழனி வட்டம், திண்டுக்கல் மாவட்டம்

## POLICE, GROUP - I & II மாதிரித்தேர்வு



ஆயக்குடி மரத்தடி இலவச பயிற்சி மையத்திற்கு
ஆயிரக்கணக்கில் மாணவ மாணவிகள் பயில வர காரணம்
**உண்மை, உழைப்பு, நம்பிக்கை** மட்டுமே.

**அறிவிக்கப்பட்டுள்ள போலீஸ் தேர்வின்**
**12,000 பணிகள் அனைத்தும்**
**நமக்கே! நமதே!!**

**போட்டித்தேர்வுகளுக்கு தயாராகிக்கொண்டே இருங்கள்!**

**நடப்பு நிகழ்வுகள், திறனறிவு, வரலாறு, புவியியல், அரசியல்**
**ஆகிய பகுதிகளில் தவறுகளைத் தவிர்த்தால் வெற்றி உறுதி !**

பஸ் நிறுத்தம்: புதிய காவல்நிலையம், நந்தவனம் மரத்தடி, பழைய ஆயக்குடி.

**லஞ்சம் தவிர்! நெஞ்சம் நிமிர்!!**

# மாதிரித்தேர்வு

1. தவறாக பொருந்தியுள்ளதை தேர்வு செய்க?
   a) 4-வது அட்டவணை - மாநிலங்களுக்கு ராஜ்ய சபை உறுப்பினர்கள் இடங்கள் ஒதுக்கீடு
   b) 5-வது அட்டவணை - பதவி பிரமாணம் பற்றியது
   c) 7-வது அட்டவணை மத்திய, மாநில அரசுகளிடையே அதிகார பகிர்வு
   **d) 10-வது அட்டவணை - கட்சித் தாவல் தடைச்சட்டம்**

2. பொருத்துக?
   a) இந்திய அரசுச்சட்டம் 1935 - 1. பணியாளர் தேர்வாணையம் அமைப்பு
   b) அமெரிக்கா - 2. சுதந்திரமான நீதித்துறை, அடிப்படை உரிமைகள்
   c) அயர்லாந்து - 3. அரசின் வழிகாட்டு நெறிமுறைகள்
   d) ஆஸ்திரேலியா - 4. பொதுப்பட்டியல், பாராளுமன்ற கூட்டமர்வு

| | A | B | C | D |
|---|---|---|---|---|
| **a)** | **1** | **2** | **3** | **4** |
| b) | 2 | 1 | 4 | 3 |
| c) | 3 | 4 | 2 | 1 |
| d) | 2 | 3 | 1 | 4 |

3. தவறானதைத் தேர்வு செய்க?
   a) பாராளுமன்றம் மற்றும் சட்டமன்ற தேர்தல்களில் வாக்களிக்க வயது வந்தோர் வாக்குரிமை முறை பற்றிக் குறிப்பிடும் விதி - 326
   b) வாக்காளர் பட்டியலில் மதம், இனம், ஜாதி அல்லது பாலினம் காரணமாக ஒருவருக்கு பட்டியலில் இடம்பெற தகுதியில்லை என அறிவிக்க இயலாது - 325
   **c) இந்தியத் தேர்தல் ஆணையத்தின் வழிகாட்டுதலின்படி மத்திய மாநில சட்டமன்றங்கள், உள்ளாட்சி அமைப்புகளின் தேர்தல் நடைபெற வேண்டும் - 324**
   d) தேர்தல் விவகாரங்களில் நீதிமன்றங்கள் தலையிட இயலாது - 329

4. கீழ்க்கண்டவர்களில் யார் இந்தியக் குடிமகனாக கருதப்பட மாட்டார்?
   a) அரசியலமைப்புச் சட்டம் நடைமுறைக்கு வருவதற்கு முன்பு இந்தியாவில் பிறந்தவர், இந்தியாவில் வசிக்கும் பெற்றோர்களுக்கு பிறந்தவர்கள் அல்லது ஐந்தாண்டுகளுக்கு முன்பிலிருந்து சாதாரணமாக இந்தியாவில் வசிப்பவர்.
   b) 1948, ஜூலை 19-க்கு முன்பு பாகிஸ்தானிலிருந்து இந்தியாவிற்கு குடிபெயர்ந்தவர்கள்
   **c) 1947, மார்ச் 1-க்கு முன்பாக இந்தியாவிலிருந்து பாகிஸ்தானுக்கு சென்று, பிறகு இந்தியாவிற்கு திரும்பி குடியுரிமை வேண்டி விண்ணப்பித்த நாளிலிருந்து குறைந்தது 6 மாதங்கள் இந்தியாவில் வசிப்பவர்கள்**
   d) பிரிக்கப்படாத இந்தியாவில் வசித்தவர்கள் ஆனால் இந்தியாவிற்கு வெளியே வசித்து குடியுரிமை வேண்டியவர்கள்

5. தவறாக பொருந்தியுள்ளதை தேர்வு செய்க?
   a) Article-23 - கட்டாய வேலை, கொத்தடிமை முறை ஒழிப்பு
   b) Article 24 - குழந்தைத் தொழிலாளர் முறை ஒழிப்பு
   c) Article 22 - தடுப்புக் காவல் சட்டத்தின் கீழ் கைது செய்தலுக்கு எதிரான பாதுகாப்பு
   **d) Article 26 - சிறுபான்மையினர் கல்வி நிறுவனங்கள் அமைக்க, நிர்வகிக்க உரிமை**

6. பாராளுமன்ற அமைப்பு முறையின் சிறப்புக் கூறுகளில் சரியானது எது?
   1. கூட்டுப்பொறுப்பு, 2. அரசியல் ஒருமைப்பாடு, 3. இரட்டை உறுப்பினர் முறை
   4. பிரதமர் தலைமை, 5.கீழவை கலைக்கும் தன்மை, 6. அதிகார பிரிவினை
   **a) 1, 2, 3, 4 மற்றும் 5** b) 2, 3, 4 மற்றும் 5 c) 1, 2, 3 மற்றும் 4 d) 1, 3, 4 மற்றும் 5

7. கீழ்க்கண்ட கூற்றுகளில் சரியானது எது?
   1. மிக நீண்ட காலம் குடியரசுத் தலைவராக இருந்தவர், டாக்டர் ராஜேந்திர பிரசாத்
   2. பதவியிலிருக்கும் போதே மரணமடைந்த முதல் குடியரசுத்தலைவர் பக்ருதின்அலி அகமது
   3. மிக இளம் வயது குடியரசுத் தலைவர் நீலம் சஞ்சீவ்ரெட்டி
   4. மிக வயதான குடியரசுத்தலைவர் ஆர்.வெங்கட்ராமன்
   a) 1, 3 மற்றும் 4 **b) 1, 2 மற்றும் 4** c) அனைத்தும் d) 1, 3 மற்றும் 4

8. சரியாக பொருந்தியுள்ளதை தேர்வு செய்க?
   1. லால் பகதூர்சாஸ்திரி - வெளிநாட்டில் மரணமடைந்த முதல் பிரதமர்
   2. சரண்சிங் - பாராளுமன்றத்தினை சந்திக்காத முதல் பிரதமர்
   3. மொரார்ஜி தேசாய் - மிகவும் வயதான பிரதமர் மற்றும் ராஜினாமா செய்தவர்
   4. வி.பி.சிங் - நம்பிக்கையில்லா தீர்மானம் மூலம் பதவி இழந்தவர்
   5. வாஜ்பேயி - மிகக் குறைந்த காலம் பதவி வகித்தவர்
   a) 1, 2, 3, 4 மற்றும் 5 b) 2, 3, 4 மற்றும் 5 **c) அனைத்தும்** d) 1, 3, 4 மற்றும் 5

9. கீழ்க்கண்ட மாநிலங்களின் லோக் சபை இடங்களை பொருத்துக?

a) ஆந்திரப்பிரதேசம் - 1. 25
b) உத்திரப்பிரதேசம் - 2. 80
c) மேற்கு வங்கம் - 3. 42
d) பீகார் - 4. 40

| | A | B | C | D |
|---|---|---|---|---|
| **a** | **1** | **2** | **3** | **4** |
| b | 3 | 2 | 1 | 4 |
| c | 4 | 3 | 1 | 2 |
| d | 1 | 3 | 2 | 4 |

10. கீழ்க்கண்டவற்றுள் சரியானதை தேர்வு செய்க?
1. பாராளுமன்றத்தின் முதல் சபாநாயகர் ஜி.பி.மாவ்லங்கர்
2. முதல் துணை சபாநாயகர் அனந்த சயனம் அய்யங்கார்
3. இந்தியாவின் முதல் தேர்தல் ஆணையர் சுகுமார் சென்
4. முதல் தலைமை கணக்குத் தணிக்கை அலுவலர் வி.என்.ராவ்
5. நிதிக்குழுவின் முதல் தலைவர் கே.சி.நியோகி
a) 1, 2, 3 மற்றும் 5 b) 2, 3, 4 மற்றும் 5 **c) அனைத்தும்** d) 1, 3, 4 மற்றும் 5

11. நிதி அயோக் அமைப்புப் பற்றிய கீழ்க்கண்ட கூற்றுகளில் சரியானதை தேர்வு செய்க?
1. இது அரசுக்கு (Think Tank) வழிகாட்டியாகவும் கொள்கை உருவாக்கத்திலும் முக்கியப் பங்காற்றுகிறது
2. NITI Aayog-National Institution for Transforming India அமைப்பின் தலைவராக பிரதமர் செயல்படுகிறார்
3. முதல் துணைத்தலைவர் - அரவிந்த் பனகாரியா
4. இதன் தலைமை செயல் அலுவலராக அமிதாப் காந்த் சமீபத்தில் கூடுதல் பொறுப்பேற்றார்
a) 1, 3 மற்றும் 4 b) 1, 2 மற்றும் 4 **c) அனைத்தும்** d) 1, 3 மற்றும் 4

12. கீழ்க்கண்டவற்றுள் அரசியலமைப்புச் சட்டத்தின்படி அமைக்கப்பட்ட அமைப்புகள் எது?
1. தேர்தல் ஆணையம், 2. மத்திய, மாநில பணியாளர் தேர்வாணையங்கள், 3. நிதிக்குழு,
4. தேசிய எஸ்.சி/எஸ்.டி ஆணையம், 5. கணக்குத் தணிக்கை அலுவலர்
6. லோக்பால் மற்றும் லோக் ஆயுக்தா, 7. மனித உரிமைகள் ஆணையம்
a) 2, 3, 4, 5 மற்றும் 6 b) 1, 2, 3, 4 மற்றும் 6 c) அனைத்தும் **d) 1, 2, 3, 4 மற்றும் 5**

13. தவறானதை தேர்வு செய்க?
**a) இந்தியாவின் முதல் மக்கள் நீதிமன்றம் (லோக் அதாலத்) 1986-ல் மும்பையில் அமைக்கப்பட்டது**
b) அனைத்திந்திய பணிகளுக்கான பணியிடங்களை அதிகப்படுத்தும் அதிகாரம் ராஜ்யசபைக்கு மட்டுமே உண்டு (ஷரத்து 312)
c) மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலைவாய்ப்புத் திட்டம் அரசியலமைப்புச் சட்ட ஷரத்து 30-ன்படி உருவாக்கப்பட்டுள்ளது
d) இந்தியாவின் முதல் உச்சநீதிமன்ற நீதிபதி ஹெச்.ஜே.கானியா

14. நம்பிக்கையின் தீர்மானம் கொண்டுவர தேவையான குறைந்தபட்ச உறுப்பினர்களின் எண்ணிக்கை?
a) 80 உறுப்பினர்கள் b) 40 உறுப்பினர்கள் c) 160 உறுப்பினர்கள் **d) 50 உறுப்பினர்கள்**

15. கீழ்க்கண்ட எந்த ஆண்டில் லோக்பால் மசோதா பாராளுமன்றத்தில் தாக்கல் செய்யப்படவில்லை?
a) 1968 b) 1971 **c) 1978** d) 1985

16. சரியாக பொருந்தியுள்ளதை தேர்வு செய்க?
a) அரசியலமைப்புச் சட்டத்திருத்த நடைமுறைகள் - ஷரத்து 368
**b) பிரதம அமைச்சரின் பணிகள் - ஷரத்து 78**
c) ஜனாதிபதி ஆட்சி - ஷரத்து 356 d) மாநிலங்களுக்கிடையிலான குழு - ஷரத்து 264

17. குடியரசுத் தலைவரை தேர்ந்தெடுக்கும் தேர்தலில் இவர்கள் இருப்பர்?
a) பாராளுமன்ற சட்டமன்ற உறுப்பினர்கள்
b) தேர்ந்தெடுக்கப்பட்ட பாராளுமன்ற உறுப்பினர்கள்
**c) தேர்ந்தெடுக்கப்பட்ட பாராளுமன்ற மற்றும் சட்டமன்ற கீழவை உறுப்பினர்கள்**
d) நியமிக்கப்பட்ட மற்றும் தேர்ந்தெடுக்கப்பட்ட பாராளுமன்ற மேலவை மற்றும் கீழவை உறுப்பினர்கள், சட்டமன்ற கீழவை உறுப்பினர்கள்

18. பஞ்சாயத்து ராஜ் அமைப்பின் மீதான அசோக் மேத்தா கமிட்டியின் பரிந்துரைகளில் சரியானது?
1. இரண்டடுக்கு அமைப்பு முறை 2. எஸ்.சி/எஸ்.டி மக்களுக்கு இட ஒதுக்கீடு
3. பஞ்சாயத்து ராஜ் நிறுவனங்கள் கட்டாய வரிவிதிப்பு அதிகாரம் 4. பஞ்சாயத்து ராஜ் நிறுவனங்களில் அரசியல் கட்சியினர் பங்கேற்பு
5. பதவிக்காலம் முடிவடைந்தால் ஆறு மாதத்திற்குள் தேர்தல் நடத்துவது
a) 1, 4 மற்றும் 5 b) 2, 3 மற்றும் 5 **c) 1, 2, 3 மற்றும் 4** d) அனைத்தும்

19. பொருத்துக?

a) குடியரசுத்தலைவரின் நிர்வாக அதிகாரம் - 1. ஷரத்து 61
b) குடியரசுத்தலைவரின் பதவிக்காலம் - 2. ஷரத்து 54
c) குடியரசுத்தலைவர் தேர்தல் - 3. ஷரத்து 53
d) குடியரசுத்தலைவர் பதவி நீக்கம் - 4. ஷரத்து 56

| | A | B | C | D |
|---|---|---|---|---|
| **a** | **3** | **4** | **2** | **1** |
| b | 4 | 3 | 1 | 2 |
| c | 1 | 2 | 3 | 4 |
| d | 1 | 3 | 2 | 4 |


ஆயக்குடி மரத்தடி இலவச பயிற்சி மையம், தொடர்புக்கு : 94863 01705, 79041 48183

20. தவறாக பொருந்தியுள்ளதை தேர்வு செய்க?

a) மத்திய புலனாய்வு அமைப்பு (சிபிஐ)-1963 **b) சிறப்புக் காவல்படை உருவாக்கம் - 1946**

c) ஊழல் தடுப்புச்சட்டம் - 1947 d) மத்திய விழிப்புப்பணி ஆணையம் - 1964

21. சரியாக பொருந்தியுள்ளதை தேர்வு செய்க?

1. பொதுக்கணக்குக் குழு 1921-ல் உருவாக்கப்பட்டது. இதில் 15 பேர் லோக் சபையிலும் 7 பேர் ராஜ்ய சபையிலும் தேர்வு செய்யப்படுகின்றனர்
2. மதிப்பீட்டுக் குழு ஜான் மாத்தாய் பரிந்துரையின் பேரில் 1950-ல் உருவாக்கப்பட்டது. இதிலுள்ள மொத்தம் 30 உறுப்பினர்களும் லோக் சபையில் மட்டுமே தேர்வு செய்யப்படுகின்றனர்
3. பொதுத்துறை நிறுவனங்களுக்கான கமிட்டி 1964-ல் கிருஷ்ண மேனன் கமிட்டியின் பரிந்துரையின் பேரில் அமைக்கப்பட்டது. இதன் தலைவர் ராஜ்ய சபை உறுப்பினராக இருக்க இயலாது
4. பாராளுமன்ற நிலைக்குழு (Department Standing Committee) லோக்சபை விதிகள் கமிட்டியின் பரிந்துரையின் பேரில் 1993-ல் அமைக்கப்பட்டது. இதன் உறுப்பினர்கள் எண்ணிக்கை 31. (லோக்சபை-21, ராஜ்யசபை-10)

a) 1, 2 மற்றும் 4 b) 2, 3 மற்றும் 4 **c) 1, 2, 3 மற்றும் 4** d) 1, 3 மற்றும் 4

22. லோக்பால் மற்றும் லோக் ஆயுக்தா அமைப்பின் தலைவர் மற்றும் உறுப்பினர்களை தேர்வு செய்யும் தேர்வுக் குழுவில் இடம் பெற்றுள்ளவர்கள்?

1.பிரதமர், 2. சபாநாயகர், 3. லோக்சபை எதிர்கட்சித் தலைவர்

4. உச்சநீதிமன்ற தலைமை நீதிபதி அல்லது அவரால் நியமிக்கப்படும் ஒரு உச்சநீதிமன்ற நீதிபதி

5. மேற்கண்ட நால்வராலும் தேர்வு செய்யப்படும் ஒரு சட்ட நிபுணர்

a) 1, 2, 4 மற்றும் 5 b) 2, 3, 4 மற்றும் 5 c) 1,2, 3 மற்றும் 4 **d) அனைத்தும்**

23. தாதாபாய் நௌரோஜி பற்றிய கீழ்க்கண்ட கூற்றுகளில் சரியானது எது?

1. 1906 கல்கத்தா மாநாட்டில் சுயராஜ்யம் கோரிய முதல் இந்தியர்
2. இந்தியாவின் முதுபெரும் மனிதர் எனப்படுகிறார்
3. பிரிட்டிஷ் பொதுசபைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்ட முதல் இந்தியர்
4. 1901-ல் வறுமையும் பிரிட்டிஷ் ஆட்சியற்ற இந்தியாவும் என்ற நூலில் பிரிட்டிஷாரின் சுரண்டல் கொள்கையினை சாடினார்

a) 1, 2 மற்றும் 4 b) 2, 3 மற்றும் 4 **c) அனைத்தும்** d) 1, 3 மற்றும் 4

24. பொருத்துக?

a) துர்க்கேஷ நந்தினி - 1. அரவிந்தகோஷ்

b) கர்மயோகி - 2. பக்கிம் சந்திர சாட்டர்ஜி

c) இந்தியன் ஒப்பீனியன் - 3. அன்னிபெசண்ட்

d) காமன்வீல் - 4. காந்தி

| | A | B | C | D |
|---|---|---|---|---|
| **a** | **2** | **1** | **4** | **3** |
| b | 4 | 3 | 1 | 2 |
| c | 1 | 2 | 3 | 4 |
| d | 1 | 3 | 2 | 4 |

25. சரியாக பொருந்தியுள்ளதை தேர்வு செய்க?

1. பிரம்ம சமாஜம் (1830) - ராஜாராம் மோகன்ராய்
2. இளம் வங்காள இயக்கம் - ஹென்றி லூயிஸ் விவியன் தொராசியோ
3. குகா இயக்கம் / நாம்தாரி (1841) - பாய் பாலக் சிங், பாபா ராம் சிங்
4. லோகஹிதவாதி - கோபால் ஹரி தேஷ்முக்
5. குடைகிட்மாக்கர் இயக்கம் (1929) - கான் அப்துல் காபர்கான்

a) 1, 4 மற்றும் 5 b) 2, 3 மற்றும் 5 c) 1, 2, 3 மற்றும் 4 **d) அனைத்தும்**

26. இந்திய தேசிய காங்கிரஸ் பற்றிய கூற்றுகளில் தவறாக பொருந்தியுள்ளதை தேர்வு செய்க?

a) சுபாஷ் சந்திரபோஸ் தலைமை தாங்கிய மாநாடு - ஹரிபுரா (1938)

**b) சர்தார் வல்லபாய் படேல் தலைமை தாங்கிய மாநாடு - பனாரஸ் (1905)**

c) காந்தி தலைமை தாங்கிய மாநாடு - பெல்காம் (1924)

d) நேரு தலைமை தாங்கிய முதல் மாநாடு - லாகூர் (1929)

27. காலவரிசைப்படி சரியான குறியீட்டினை தேர்வு செய்க?

1. சுயராஜ்ஜிய கட்சி துவக்கம், 2. சைமன் கமிஷன் அமைப்பு 3. கிலாபத் இயக்கம், 4. கிரிப்ஸ் கமிஷன்

**a) 3, 1, 2, 4** b) 1, 2, 3, 4 c) 2, 4, 1, 3 d) 3, 4, 2, 1

28. கீழ்க்கண்டவற்றுள் சரியான தொடரினை தேர்வு செய்க?

1. ஆச்சார்யா வினோபாபாவே 1941, மே 15-ல் தனிநபர் சத்தியா கிரகத்தினை முதன்முதலில் தொடங்கினார்.
2. வெள்ளையனே வெளியேறு இயக்கம் துவங்க பம்பாயில் 1942, ஆகஸ்ட் 8-ஆம் தேதி நடந்த காங்கிரஸ் கமிட்டி கூட்டத்தில் முடிவெடுக்கப்பட்டது
3. 1946, ஆகஸ்ட் 16-ல் ஜின்னா நேரடி நடவடிக்கை தினமாக அறிவித்தார். 1947, மார்ச் 27-ல் பாகிஸ்தான் தினம் கொண்டாடப்பட்டது
4. 1930, ஜனவரி 26-ல் காங்கிரஸ் முதல் விடுதலை தினமாக கொண்டாடியது
5. 1931, மார்ச் 5-ல் ஏற்பட்ட காந்தி-இர்வின் ஒப்பந்தம் டெல்லி ஒப்பந்தம் எனப்படுகிறது

a) 1, 4 மற்றும் 5 b) 2, 3 மற்றும் 5 c) 1, 2, 3 மற்றும் 4 **d) அனைத்தும்**

29. காந்தியினை பற்றிய கூற்றுகளில் சரியானதை தேர்வு செய்க?
1. காந்தியினை தேசத் தந்தை என அழைத்தவர் - சுபாஷ் சந்திர போஸ்
2. காந்தியினை அரைநிர்வாண பக்கிரி என அழைத்தவர் - பிராங்க் மோரஸ்
3. காந்தியினை இந்திய பக்கிரி என அழைத்தவர் - வின்ஸ்டன் சர்ச்சில்
4. காந்தியினை மகாத்மா என அழைத்தவர் - ரவீந்திர நாத் தாகூர்
5. காந்தியின் அரசியல் குரு - கோபாலகிருஷ்ண கோகலே
a) 1, 4 மற்றும் 5 b) 2, 3 மற்றும் 5 c) 1, 2, 3 மற்றும் 4 **d) அனைத்தும்**

30. ஒத்துழையாமை இயக்கம் பரவிய பகுதிகளில் தலைமையேற்ற தலைவர்களின் பொருத்தமில்லாததை தேர்வு செய்க?
a) பெஷாவர் - கான் அப்துல் கபார்கான் b) மெட்ராஸ் - ராஜகோபாலாச்சாரி
c) கேரளா - கேளப்பன் **d) வடகிழக்கு பகுதி - ராணி கைதிலியோ**

31. கீழ்க்கண்ட கூற்றுகளை ஆராய்ந்து சரியான விடையினை தேர்வு செய்க?
ஆண்ட்ரூ பிரேஷர் தலைமையில் போலீஸ் கமிஷன் அமைப்பு, தாமஸ் ரேய்லி தலைமையில் பல்கலைக் கழகக் கமிட்டி அமைப்பு, மெக்டோனல் தலைமையில் பஞ்ச நிவாரண குழு அமைப்பு, பழங்கால நினைவுச் சின்னங்கள் பாதுகாப்பு சட்டம் அமைப்பு, பூசா விவசாய நிறுவனம் அமைப்பு, இந்திய நாணயங்கள் சட்டம் உருவாக்கம் - இவை யாருடைய காலத்தில் அமைக்கப்பட்டது?
**a) கர்சன் பிரபு** b) லிட்டன் பிரபு c) செம்ஸ்போர்டு பிரபு d) மேயோ பிரபு

32. 1857-ஆம் ஆண்டு புரட்சியினைப் பற்றிய கீழ்க்கண்ட கூற்றுகளில் சரியானது எது?
1. 1857 புரட்சியினை முதல் இந்திய சுதந்திரப்போர் எனக் குறிப்பிட்டவர் - வி.டி.சவார்க்ர்
2. புரட்சியினை முதன்முதலில் துவக்கியவர் 34-வது படைப்பிரிவினைச் சார்ந்த மங்கள் பாண்டே
3. இப்புரட்சியின் முடிவில் கவர்னர் ஜெனரல் பதவியானது வைசிராய் பதவியாக மாற்றப்பட்டது. 2-ஆம் பகதூர்ஷா ரங்கூனுக்கு நாடுகடத்தப்பட்டார்.
4. ஜான்சி பகுதியில் புரட்சியினை ஒடுக்கியவர் ஹக் ரோஸ்
a) 1, 2 மற்றும் 4 b) 2, 3 மற்றும் 4 **c) அனைத்தும்** d) 1, 3 மற்றும் 4

33. கீழ்க்கண்ட கூற்றுகளில் சரியான குறியீட்டினை தேர்வு செய்க?
1. துணைப்படைத் திட்டத்தினை முதன்முதலில் ஏற்றுக்கொண்டவர் - ஐதராபாத் நிஜாம்
2. ராயத்துவாரி முறையில் வரிவிதிப்பானது ரிக்கார்டோவின் அறிவியல் முறையிலான வரிக் கொள்கையினை பின்பற்றி மண்ணின் தன்மை மற்றும் பயிர்களுக்கேற்ப வரி விதிக்கப்பட்டது
3. மாவட்ட நீதிபதிகள் பணியிடங்களை உருவாக்கியவர் - காரன்வாலிஸ் பிரபு
4. இரட்டை ஆட்சி முறையினை ஒழித்தவர் - வாரன் ஹேஸ்டிங்ஸ் பிரபு
a) 1. 2 மற்றும் 4 b) 2, 3 மற்றும் 4 **c) அனைத்தும்** d) 1, 3 மற்றும் 4

34. பொருத்துக?
a) பரத நாட்டியம் - 1. ருக்மினி தேவி அருண்டேல்
b) கதக்களி - 2. வள்ளத்தோல் நாராயண மேனன்
c) குச்சிப்புடி - 3. யாமினி கிருஷ்ணமூர்த்தி
d) மோஹினியாட்டம் - 4. கல்யாணி அம்மா

| | A | B | C | D |
|---|---|---|---|---|
| **a** | **1** | **2** | **3** | **4** |
| b | 3 | 2 | 1 | 4 |
| c | 4 | 3 | 1 | 2 |
| d | 1 | 3 | 2 | 4 |

35. சரியான இணையைத் தேர்வு செய்க?
1. நீரைவிட இலேசான கோள் - சனி 2. பச்சைக்கோள் - யுரேனஸ்
3. மிகவும் குளிர்ச்சியான கோள் - நெப்டியூன், 4. பச்சை நட்சத்திரம்-நெப்டியூன்
5. மிகவும் அடர்த்தியான கோள் - புவி
a) 1, 4 மற்றும் 5 b) 2, 3 மற்றும் 5 c) 1, 2, 3 மற்றும் 4 **d) அனைத்தும்**

36. தவறான வாக்கியத்தினை தேர்வு செய்க?
a) சூரியக்குடும்பத்திற்கு வெளியே அமைந்துள்ள பிரகாசமான நட்சத்திரம் - சிரியஸ்
b) சூரியக்குடும்பத்திற்கு அருகிலுள்ள நட்சத்திரம் - ப்ராக்ஷிமா செண்டாரி
c) பால்வெளி (ஆகாய கங்கை) அண்டத்தினைக் கடந்து பல அண்ட வெளிகள் இருப்பதை நிறுவியவர் - எட்வின் ஹப்பிள்
**d) பால்வெளி அண்டம் மற்றும் ஆண்ட்ரோமெடா ஆகியவை பரவளைய வடிவம் கொண்டவை**

37. கீழ்க்கண்டவற்றுள் சரியான குறியீட்டினை தேர்வு செய்க?
1. வட அரைக்கோளத்தில் மிக நீண்ட பகல்பொழுது ஜூன் 21-ல் ஏற்படுகிறது
2. மார்ச் 21 மற்றும் செப்டம்பர் 23 ஆகிய நாட்களில் இரவு பகல் சமமாக நிலவுகிறது
3. வட அரைக்கோளத்தில் மிகக் குறுகிய பகல்பொழுது டிசம்பர் 22-ல் ஏற்படுகிறது
4. ஜனவரி 3-ல் சூரியனுக்கும் புவிக்கும் உள்ள தொலைவு குறைவாக உள்ளது
5. புவி தனது அச்சில் $23.5^{o}$ சாய்வாக சுற்றுவதால் பருவக்கால மாற்றங்கள் ஏற்படுகிறது
a) 1, 4 மற்றும் 5 b) 2, 3 மற்றும் 5 c) 1,2,3 மற்றும் 4 **d) அனைத்தும்**

38. புவியின் உள்ளடக்கினைப் பற்றிய கூற்றுகளில் சரியானது எது?
1. புவியின் மேலடுக்கில் கண்டப்பகுதி சியால் எனப்படுகிறது
2. கவசப் பகுதியின் மேலடுக்கானது அஸ்தினோஸ்பியர் எனப்படுகிறது
3. மோஹோரோவிசிக் தடுப்பு என்பது மேலோட்டினை கவசத்திலிருந்து பிரிக்கிறது
4. புவியின் மைய அடுக்கு பேரிஸ்பியர் எனப்படுகிறது
5. கருவப்பகுதியில் இரும்பு மற்றும் நிக்கல் அதிகம் இருப்பதால் இது நைப் எனப்படுகிறது
a) 1, 4 மற்றும் 5 b) 2,3 மற்றும் 5 c) 1,2,3 மற்றும் 4 **d) அனைத்தும்**

39. கீழ்க்கண்ட தொடர்களில் தவறானதை தேர்வு செய்க?
a) டையட்ரோப்பிஸம் என்பது ஒட்டுருவு அழிதல் எனப்படும். இது மெதுவாக வளைதல், மடிதல், வளர்த்தல் மற்றும் உடைத்தல் எனப் பொருள்படும்
b) புவியின் மேலோட்டில் ஏற்படும் மிகப்பெரிய செங்குத்து நகர்வு கண்ட ஆக்க நகர்வு அல்லது எபிரோஜெனிக் நகர்வு எனப்படுகிறது
**c) பிதிர்வு மலை, பீடபூமி, பிளவு பள்ளத்தாக்கு கொப்பரை ஆகியவை ஒரோஜெனிக் நகர்வால் ஏற்படுகிறது**
d) ஒரோஜெனிக் நகர்வால் மடிப்பு மலைகள் உருவாகின்றன

40. பொருத்துக?
a) இந்தியா - 1. பாரன் தீவு எரிமலை, நார்கண்டம் எரிமலை
b) இத்தாலி - 2. வெசூவியஸ், எட்னா
c) ஹவாய் தீவு - 3. மௌனகியா, மோனோலோவா
d) தென் அமெரிக்கா - 4. கோடபாக்ஷி

| | A | B | C | D |
|---|---|---|---|---|
| **a** | **1** | **2** | **3** | **4** |
| b | 3 | 2 | 1 | 4 |
| c | 4 | 3 | 1 | 2 |
| d | 1 | 3 | 2 | 4 |

41. கீழ்க்கண்டவற்றுள் பனியாறுகளோடு தொடர்புடைய நிலத்தோற்றங்கள் எவை?
1. சர்க் 2. அரெட்டுகள் 3. யு வடிவ பள்ளத்தாக்கு
4. தொங்கும் பள்ளத்தாக்கு 5. டிரம்லின்கள் 3. மொரைன்கள்
a) 1,3,4 மற்றும் 5 b) 1,2,3 மற்றும் 5 c) 1,2,3 மற்றும் 6 **d) அனைத்தும்**

42. சரியான குறியீட்டினை தேர்வு செய்க?
1. தென்னிந்தியாவின் மிக நீளமான ஆறு - கோதாவரி
2. பீமா, துங்கபத்திரை, மூஷி மற்றும் கொய்னா ஆகியவை கிருஷ்ணா நதியின் துணையாறுகளாகும்.
3. தீபகற்ப ஆறுகளில் மேற்கு நோக்கிப் பாய்வதில் நீளமான ஆறு நர்மதை, இது அமர்கண்டாக் பீடபூமியில் உருவாகிறது
4. ஜெர்ஷோப்பா நீர்வீழ்ச்சி (ஜோக்) சாராவதி ஆற்றில் உருவாகிறது
5. ஆகாய கங்கை நீர்வீழ்ச்சி கொல்லிமலையில் அமைந்துள்ளது
a) 1,3மற்றும் 5 b) 1, 2, 3 மற்றும் 5 c) 1,2,3 மற்றும் 4 **d) அனைத்தும்**

43. கீழ்க்கண்டவற்றுள் வானிலை மற்றும் காலநிலையினை பாதிக்கும் காரணிகள் எவை?
1. அட்சரேகை, 2. உயரம், 3. கடலிலிருந்து தூரம்,
4. கடல் நீரோட்டங்கள் 5. எல்நினோ விளைவு, 6. காற்றோட்டத் திசை
a) 1,3,4 மற்றும் 5 b) 1,2,3 மற்றும் 5 c) 1,2,3 மற்றும் 6 **d) அனைத்தும்**

44. பொருத்துக?
a) அடியடுக்கு (டிரோபோஸ்பியர்) - 1. சமவெப்ப அடுக்கு
b) படையடுக்கு (ஸ்ட்ரேடோஸ்பியர்) - 2. காலநிலை மாற்றங்கள்
c) அயனியடுக்கு (அயனோஸ்பியர்) - 3. ஹைட்ரஜன் ஹீலியம்
d) வெளியடுக்கு (எக்ஸோஸ்பியர்) - 4. மின் செறிவூட்டம்

| | A | B | C | D |
|---|---|---|---|---|
| a | 1 | 2 | 3 | 4 |
| b | 2 | 1 | 4 | 3 |
| c | 4 | 3 | 1 | 2 |
| **d** | **1** | **3** | **2** | **4** |

45. சரியாக பொருந்தியுள்ளதை தேர்வு செய்க?
a) பிரீக் பீல்டர் - வடக்கு இத்தாலி b) சிராக்கோ - ஆஸ்திரேலியா
c) மிஸ்ட்ரல் - அர்ஜெண்டினா **d) லூ - இந்தியா**

46. தவறாக் பொருந்தியுள்ளதை தேர்வு செய்க?
a) மின்னலியல் - ஏரோலஜி b) கதிர்வீசலியல் - புல்மினாலஜி
c) பேராழியியல் - ஓகேனஸ் **d) சமவெப்ப கோடு - ஐசோஹைட்ஸ்**

47. கீழ்க்கண்டவற்றுள் தவறானதை தேர்வு செய்க?
a) ஒரு கோளத்தின் ஆரம் 50 சதவீதம் அதிகரித்தால் அதன் புறப்பரப்பு 125 சதவீதம் அதிகரிக்கும்
b) ஒரு கோளத்தின் ஆரம் 50 சதவீதம் அதிகரித்தால் அதன் கன அளவு 237.5 சதவிதம் அதிகரிக்கும்
c) ஒரு கூம்பின் உயரம் மற்றும் ஆரம் ஆகியவை இரண்டு மடங்கானால் அதன் கனஅளவு 8 மடங்கு அதிகமாகும்
**d) ஒரு கோளம் மற்றும் கனச்சதுரத்தின் புறப்பரப்பு சமமாக இருப்பின், அவற்றின் கன அளவுகளின் விகிதமானது $\sqrt{\pi} : \sqrt{6}$ ஆகும்**

48. சரியாக பொருந்தியுள்ளதை தேர்வு செய்க?

1. 15 பேர் கொண்ட ஒரு குழுவிலிருந்து கிரிக்கெட் விளையாட தேவையான வீரர்களை 1365 வழிகளில் தேர்வு செய்யலாம்
2. 6 ஆண்கள் மற்றும் 5 பெண்கள் கொண்ட ஒரு குழுவிலிருந்து 3 ஆண்கள் மற்றும் 2 பெண்கள் கொண்ட ஒரு கமிட்டி அமைக்க 200 வழிகளை பின்பற்றலாம்
3. APPLE என்ற வார்த்தையிலுள்ள எழுத்துக்களை கொண்டு 60 வழிகளில் வார்த்தைகளை அமைக்கலாம்
4. A என்பவர் தனது வாதங்களில் 75 சதவீதமும் B என்பவர் 80 சதவீதமும் உண்மை பேசுகிறார். இருவரிடமும் ஒரே விஷயத்தினை கூறும்பொழுது அவர்கள் தங்களது கருத்துக்களில் ஒருவர் கூறியதை மாற்றிக் கூறுவதற்கு 35 சதவீதம் வாய்ப்புள்ளது

a) 1,2 மற்றும் 4 b) 2,3 மற்றும் 4 <u>c) அனைத்தும்</u> d) 1,3 மற்றும் 4

49. கீழ்க்கண்டவற்றினை படித்து தனிவட்டி குறித்த சரியான விடையைத் தேர்வு செய்க?

1. 16 2/3% வட்டிக்கு ஒரு குறிப்பிட்ட தொகை வழங்கப்பட்டால் அசலானது 5 ஆண்டுகளில் இருமடங்காகும்
2. 20 சதவீதம் வட்டிக்கு ஒரு குறிப்பிட்ட தொகை வழங்கப்பட்டால் அசலானது 5 ஆண்டுகளில் இரு மடங்காகும்
3. ஒரு குறிப்பிட்ட தொகை ஒரு குறிப்பிட்ட வட்டியில் 5 ஆண்டுகளில் இரு மடங்கானால் 10 ஆண்டுகளில் 4 மடங்காகும்

a) 1,2 மற்றும் 3 b) 2 மற்றும் 3 <u>c) 2 மட்டும்</u> d) 3 மட்டும்

50. ஒரு குறிப்பிட்ட தொகை 10 சதவீதம் வட்டி வீதத்தில் 2 ஆண்டுகளுக்கு வழங்கப்பட்டுள்ளது. தனி வட்டி மற்றும் கூட்டு வட்டிக்கான வித்தியாசத் தொகை ரூ. 631 கிடைக்கிறது எனில் அசல் தொகை எவ்வளவு?

<u>a) 63100</u> b) 63000 c) 31500 d) 32000

51. ஒரு பால் வியாபாரி 2 கேன்களில் பால் வைத்துள்ளார். முதல் கேனில் 25 சதவீதம் நீரும், மீதம் பாலும் உள்ளது. இரண்டாவது கேனில் 50 சதவிதம் நீரும் மீதம் பாலும் உள்ளது. அவரிடம் கூடுதலாக உள்ள 12 லிட்டர் பாலினை ஒவ்வொரு கேனிலும் எத்தனை லிட்டர் ஊற்றினால் இரண்டு கேனிலும் உள்ள நீர் மற்றும் பாலின் விகிதம் 3:5 என இருக்கும்.

a) 4 மற்றும் 8 <u>b) 6 மற்றும் 6</u> c) 5 மற்றும் 7 d) 7 மற்றும் 5

52. 20, 25, 35 மற்றும் 40 ஆகிய எண்களால் வகுக்கும் பொழுது முறையே மீதி 14, 19, 29 மற்றும் 34 கிடைக்கிறது எனில் அந்த மிகச்சிறிய எண் யாது?

<u>a) 1394</u> b) 1294 c) 1260 d) 1398

53. கீழ்க்கண்டவற்றுள் மிகச்சிறிய எண் யாது? 17/18, 31/36, 43/45, 59/60

<u>a) 31/36</u> b) 17/18 c) 43/45 d) 59/60

54. A, B மற்றும் C ஆகிய மூன்று நபர்கள் வட்ட அரங்கத்தினை சுற்றி வருகின்றனர். A என்பவர் 252 வினாடிகளிலும், B என்பவர் 308 வினாடிகளிலும், C என்பவர் 198 வினாடிகளிலும் ஒரு சுற்று சுற்றிவருகின்றனர். மூவரும் ஒரே நேரத்தில் சுற்றத் துவங்கினால் தொடங்கிய இடத்தில் மீண்டும் எப்போது சந்திப்பர்?

a) 26 நிமி, 18 வி b) 42 நிமி, 36 வி c) 45 நிமி <u>d) 46 நிமி, 12 வி</u>

55. சுருக்குக? $\frac{789 \times 789 \times 789 + 211 \times 211 \times 211}{789 \times 789 - 789 \times 211 + 211 \times 211}$

<u>a) 1000</u> b) 1 c) 578 d) 100

56. SUMMER என்பதை RUNNER என குறிப்பிட்டால் WINTER என்பதை எவ்வாறு குறிப்பது?

a) SUITER b) VIOUER <u>c) WALKER</u> d) SUFFER

57. $\left(\frac{X^a}{X^b}\right)^{\frac{1}{ab}} \left(\frac{X^b}{X^c}\right)^{\frac{1}{bc}} \left(\frac{X^c}{X^a}\right)^{\frac{1}{ca}} =$

<u>a) 1</u> b) $\frac{1}{x^{abc)}}$ c) $\frac{1}{x^{(ab+bc+ca)}}$ d) 0

58. $\frac{1}{(\sqrt{9}-\sqrt{8})} - \frac{1}{(\sqrt{8}-\sqrt{7})} + \frac{1}{(\sqrt{7}-\sqrt{6})} - \frac{1}{(\sqrt{6}-\sqrt{5})} + \frac{1}{(\sqrt{5}-\sqrt{4})} = ?$

a) 1 b) 0 c) 1/3 <u>d) 5</u>

59. சரியான விடையினை தேர்வு செய்க?

1. 30-க்கும் 40-க்கும் இடையே உள்ள அனைத்து ஒற்றை எண்களின் சராசரி 39.8 ஆகும்
2. முதல் 40 இயல் எண்களின் சராசரி 20.5 ஆகும்
3. 7-ன் மடங்களில் முதல் 20 எண்களின் சராசரி 73.5 ஆகும்
4. 20 எண்களின் சராசரி பூஜ்ஜியம் எனில் பூஜ்ஜியத்தினை விட பெரிய எண்களின் எண்ணிக்கை 19 ஆகும்

a) 1,2 மற்றும் 4 b) 2,3 மற்றும் 4 <u>c) அனைத்தும்</u> d) 1,3 மற்றும் 4

60. தொடர்ச்சியான நான்கு இரட்டைப்படை எண்களின் சராசரி 27 எனில், அவற்றில் மிகப்பெரிய எண் யாது?
a) 24 b) 26 **c) 30** d) 28

61. அனிதா மற்றும் நிவிதா ஆகியோரின் வயதுகளின் பெருக்கற்பலன் 240, நிவிதாவின் வயதின் இரண்டு மடங்கினைவிட அனிதாவின் வயது 4 அதிகம் எனில் நிவிதாவின் வயது என்ன?
a) 24 **b) 12** c) 16 d) 20

62. கீழ்க்கண்டவற்றுள் சரியான குறியீட்டினை தேர்வு செய்க?
1. 21 பொருட்கள் வாங்கிய விலையானது 18 பொருட்கள் விற்ற விலைக்குச் சமம் எனில் இலாப சதவீதம் 16 2/3% ஆகும்
2. விற்றவிலை மற்றும் வாங்கிய விலைக்கிடையேயுள்ள விகிதம் 4:5 எனில், இலாபம் 25% ஆகும்
3. விற்பனை விலையினை இரு மடங்காக்கினால் இலாபம் 3 மடங்கு கிடைக்கிறது எனில் இலாப சதவீதம் 100 ஆகும்
4. 12 பொருட்கள் வாங்கிய விலை 8 பொருட்கள் விற்ற விலைக்குச் சமம் எனில் இலாபம் 50 சதவீதமாகும்
a) 1,2 மற்றும் 4 b) 2,3 மற்றும் 4 **c) அனைத்தும்** d) 1,3 மற்றும் 4

63. a:b = 5:9, b:c = 4:7 எனில் a:b:c என்ன?
**a) 20:36:63** b) 10:18:21 c) 15:41:63 d) 20:39:60

64. ஒரு கலவையில் ஆல்கஹால் மற்றும் நீரானது 4:3 விகிதத்தில் உள்ளது. இதில் மேலும் 5 லிட்டர் நீர் சேர்க்கும் பொழுது அதன் விகிதமானது 4:5 ஆகிறது எனில் அந்த கலவையில் உள்ள ஆல்கஹாலின் அளவு என்ன?
a) 24லி **b) 10லி** c) 16லி d) 20லி

65. A/3 = B/4 = C/5 எனில் A:B:C என்ன?
a) 4:3:5 b) 5:4:3 **c) 3:4:5** d) 20:15:12

66. 15 நபர்கள் தினமும் 9 மணிநேரம் வேலை செய்து 16 நாட்களில் முடிக்கின்றனர் எனில் 18 நபர்கள் தினமும் 8 மணிநேரம் வேலை செய்தால் எத்தனை நாட்களில் முடிப்பார்கள்?
a) 10 b) 20 c) 25 **d) 15**

67. ஒரு தொட்டியினை இரண்டு குழாய்கள் தனித்தனியாக 10 மணிநேரம் மற்றும் 12 மணிநேரத்தில் நிரப்பும் அதே நேரத்தில் மூன்றாவது குழாய் 20 மணிநேரத்தில் தொட்டியிலுள்ள நீரினை காலி செய்யும். மூன்று குழாய்களும் ஒரே நேரத்தில் செயல்பட்டால் தொட்டி எவ்வளவு நேரத்தில் நிரம்பும்?
a) 7 மணி 30 நிமி b) 7 மணி 15 நிமி **c) 6 மணி 30 நிமி** d) 7 மணி 50 நிமி

68. ஒரு பையில் 50 பைசா, 25 பைசா மற்றும் 10 பைசா நாணயங்கள் உள்ளன. அவற்றின் விகிதம் 5:9:4 ஆகும். அவற்றின் மொத்த மதிப்பு ரூ. 206 எனில், 50 பைசா நாணயங்களின் எண்ணிக்கை எத்தனை?
**a) 200** b) 360 c) 160 d) 300

69. 19 மீ நீளமுள்ள ஒரு ஏணி சுவரில் சாய்த்து வைக்கப்பட்டுள்ளது. தரைக்கும் ஏணிக்கும் உள்ள கோண அளவு $60^\circ$ ஆகும் எனில் ஏணியின் அடிப்பகுதிக்கும், சுவருக்கும் உள்ள தொலைவு என்ன?
**a) 9.5 மீ** b) 20 மீ c) 19.5 மீ d) 10மீ

70. தவறான தொடரினை கண்டுபுடி?
**a) 3, 5, 7, 12, 17, 19, 23** b) 41, 43, 47, 53, 61, 71, 73
c) 1, 4, 9, 16, 25, 36, 49 d) 8, 27, 64, 125, 216, 343

71. தொடரில் விடுபட்டதை தேர்வு செய்க? ABD, DGK, HMS, MTB, SBL, ---?
a) ZKU **b) ZKW** c) ZAB d) XKW

72. தவறான கூற்று எது?
a) கூம்பின் அடிப்பக்கம் வட்ட வடிவில் இல்லை எனில் அது **சாய்வு கூம்பு** ஆகும்
b) கூம்பின் அச்சானது அதன் வட்ட வடிவ அடிப்பாகத்திற்கு செங்குத்தாக இல்லை எனில் அது **வட்ட கூம்பு** ஆகும்
c) கூம்பின் வட்டவடிவ அடிப்பாகத்தின் மையத்திற்கு செங்குத்தாக உச்சி அமைந்தால் அது **நேர்வட்ட கூம்பு** ஆகும்
**d) இடை கண்டத்தின் வளைப்பரப்பு - (R+r)l**

73. (-4, -2), (-3, -5), (3, -2), (2, 3) ஆகிய புள்ளிகளை முனைகளாக கொண்ட நாற்கரத்தின் பரப்பு?
a) 25 ச.அலகுகள் **b) 28 ச.அலகுகள்** c) 30 ச.அலகுகள் d) 20 ச.அலகுகள்

74. எண்களின் வரிசை அமைப்பிற்கு Matrix (அணி) என்ற சொல்லை அறிமுகப்படுத்தியவர்?
**a) ஜேம்ஸ் ஜோசப்சில் வெஸ்டர்** b) பெர்மாட்டின் c) டீ மார்க்கன் d) ரெனி டெஸ்கார்டிஸ்

75. $\frac{x^3-1}{x^2+x+1} = ?$
a) $x+1$ **b) $x-1$** c) $x^2+1$ d) $x^2-1$

76. $\frac{x^3-8}{x^2-4} \times \frac{x^2+6x+8}{x^2+2x+4} = ?$

**a) x+4** b) x-4 c) x+2 d) x-2

76. n (P(A)) = 64 எனில் n (A) = ?

**a) 6** b) 8 c 4 d) 5

77. 13 என்பதன் இரண்டடிமான எண்?

a) $1011_2$ b) $111_2$ **c) $1111_2$** d) $1010_2$

78. கீழ்க்கண்டவற்றுள் எது பெருக்குத் தொடர் வரிசை அல்ல?

**a) 5, 10, 15, 20, ......** b) 0.15, 0.015, 0.0015....

c) $\sqrt{7}, \sqrt{21}, 3\sqrt{7}, 3\sqrt{21}$..... d) 1/9, -1/27, 1/81, -1/243.....

79. சரியான இணை எது?

1. 8-ஆல் வகுபடும் அனைத்து மூன்றிலக்க இயல் எண்களின் கூடுதல் 61376
2. 9-ஆல் வகுபடும் அனைத்து மூன்றிலக்க இயல் எண்களின் கூடுதல் 55350
3. 1+6+11+16+........+2 = 148 எனில் x = 36
4. 12 செ.மீ, 13 செ.மீ.....23 செ.மீ. பக்க அளவுகள் கொண்ட 12 சதுரங்களின் பரப்பு 3818 ச.செ.மீ

a) 1, 4 b) 2, 3, 4 c) 1, 4 **d) அனைத்தும்**

80. ஒரு சாதாரண வருடமானது 53 ஞாயிற்றுக்கிழமைகள் மற்றும் 53 திங்கட்கிழமைகள் கொண்டிருப்பதற்கான நிகழ்தகவு?

a) 1/7 b) 2/7 c) 3/7 **d) 0**

81. $7+\sqrt{3}, 7-\sqrt{3}$ ஆகியவற்றின் இருபடி சமன்பாடு?

a) $x^2+14x+46=0$ **b) $x^2-14x+46=0$** c) $x^2-14x-46=0$ d) None

82. $\sqrt{a^6+\frac{1}{a^6}-2} = ?$

a) $a^3+1/Q^3$ **b) $a^3-1/a^3$** c) $a^2+1/a^2$ d) எதுவுமில்லை

83. மதிப்பீட்டுக் குழுவில் (Estimate Committee) உள்ள ராஜ்ய சபா உறுப்பினர்களின் எண்ணிக்கை?

a) 30 b) 22 c) 15 **d) 0**

84. மொழிவாரி மாநிலம் ஏற்படுத்தப்பட்ட நாள்?

**a) 1 நவம்பர் 1956** b) 1 ஆகஸ்ட் 1956 c) 1 செப்டம்பர் 1956 d) 1 ஜனவரி 1956

85. பாறை உப்பு என்பது?

a) சல்பைடு தாது **b) ஹேலைடு தாது** c) கார்பனேட் தாது d) ஆக்சைடு தாது

86. தாமிரத்தின் அணு எண்?

a) 63.55 b) 8 c) 18 **d) 29**

87. வெண்கலம் உலோக கலவையில் இல்லாதது?

a) Cu b) Sn c) Zn **d) Pb**

88. கரிம வேதியியல் என்ற சொல்லை முதன்முதலில் பயன்படுத்தியவர்?

a) ஹோலர் **b) பெரிசீலியஸ்** c) மோஸ்லே d) மெண்டலீப்

89. ஆளுமை ஹார்மோன்?

**a) தைராக்ஸின்** b) அட்ரீனலின் c) கணையம் d) பிட்யூட்டரி

90. சரியான இணை எது?

1. 1 வானியல் அலகு = $1.496 \times 10^{11}$ m
2. ஒளியானது வெற்றிடத்தில் ஓர் ஆண்டில் செல்லக்கூடிய தொலைவு
3. ஒரு ஒளி ஆண்டு = $9.467 \times 10^{15}$m
4. ஓர் ஒளி ஆண்டு என்பது $365.25 \times 24 \times 60 \times 60 \times 3 \times 10^8$m ஆகும்

a) 1, 3, 4 b) 1, 2, 3 c) 3, 4 **d) அனைத்தும்**

91. உந்தத்தின் அலகு?

**a) $Kgms^{-1}$** b) $kgms^{-2}$ c) m/s d) $Nm^2kg^{-2}$

92. உயிர்த் தொழில்நுட்ப ஊசி மருந்துகளை குளிர செய்யும் குளிரித் தொழில் நுட்ப அமைப்புகள்?

a) ஹீலியம் **b) நைட்ரஜன்** c) அம்மோனியா d) குளோரின்

93. MRI ஸ்கேனுக்கு தேவையான வெப்பநிலை?

a) 3K b) 2K **c) 4K** d) 5K

94. 5 ஓம், 10 ஓம், 30 ஓம் மின்தடைகள் ஒரு சுற்றில் பக்க இணைப்பில் இணைக்கப்பட்டால் சுற்றின் தொகுபயன் மின்தடை என்ன?

a) 1 ஓம் **b) 3 ஓம்** c) 2 ஓம் d) 0 ஓம்

95. மின் உருகியில் (Fuse) உள்ள உலோக கலவைகள்?
**a) காரீயம், ஈயம்** b) துத்தநாகம், அலுமினியம் c) ஈயம், இரும்பு d) தாமிரம், வெள்ளி

96. $E=mc^2$ என்ற நிறை ஆற்றல் தொடர்பாளர்?
a) ஆட்டோஹான் b) ஸ்ட்ராஸ்மேன் c) ஐசக் நியூட்டன் **d) ஐன்ஸ்டீன்**

97. இயற்கை வாயுவில் காணப்படும் முதன்மையான பொருள்?
a) ஈத்தேன் **b) மீத்தேன்** c) புரோட்டான் d) பியூட்டேன்

98. காற்றுகளின் நாடு?
a) இந்தியா b) சுவீடன் **c) டென்மார்க்** d) இங்கிலாந்து

99. இந்தியாவின் முதல் தேசிய பூங்கா எந்த மாநிலத்தில் அமைந்துள்ளது?
a) கர்நாடகா **b) உத்தராஞ்சல்** c) குஜராத் d) இராஜஸ்தான்

100. ஒரு குளுக்கோஸ் மூலக்கூறு முழுமையாக ஆக்சிஜனேற்றம் பெறும் போது___ATP மூலக்கூறுகள் உண்டாகின்றன?
a) 18 b) 28 **c) 38** d) 48

101. ஒளிச்சேர்க்கைக்கு தேவையான மூலப்பொருள்கள்?
1. சூரிய ஒளி, 2. நீர், 3. $Co_2$, 4. பச்சயம்
a) 3, 4 b) 2, 3, 4 c) 1, 2, 3 **d) அனைத்தும்**

102. நமது உடலின் 'மாஸ்டர் கெமிஸ்ட்' எனப்படுவது?
a) இதயம் b) நுரையீரல் c) மூளை **d) சிறுநீரகம்**

103. மனித இதயம் எவ்வடிவம் கொண்டது?
a) இதய வடிவம் b) முக்கோண வடிவம் **c) கூம்பு வடிவம்** d) கோள வடிவம்

104. குழந்தைக்கு குறைந்தது________மாதமாவது தாய்ப்பால் வழங்கப்பட வேண்டும்?
a) 3 **b) 6** c) 12 d) 18

105. AIDS நோய்க்கான HIV வைரஸை பிரித்தெடுத்தவர்கள்?
**a) இராபர்ட் கேலோ, லுக் மாண்டகினியர்** b) இராபர்ட்ஹுக், பிளமிங்
c) இராபர்ட் கேலோ, இராபர்ட் பிரௌன் d) லுக்மாண்டகினியர், இராபர்ட்ஹுக்

106. ஐயன்வில்முட் - டாலி என்ற செம்மறி ஆட்டுக்குட்டியை எந்த ஆண்டு உருவாக்கினார்,
a) 1990 b) 1995 **c) 1996** d) 1997

107. இயற்கை தேர்வு கோட்பாட்டை வெளியிட்டவர்?
**a) சார்லஸ் டார்வின்** b) ஹியூகோ-டி-விரிஸ்
c) கிரிகர் ஜோகன் மெண்டல் d) ஜீன் பாப்டைஸ் லமார்க்

108. உலகின் எல்லா பகுதிகளிலும் குறிப்பாக 1970-ல் உலகை ஆட்டிப் படைத்த கொடுமையான நோய்?
a) பெரியம்மை b) நிமோனியா **c) இன்புளுயன்சா** d) சீதபேதி

109. மியாஸிஸ்-1 இல் ஒத்திசைவான குரோமோசோம்கள் ஜோடியுறுதல் நிலை----?
a) லெப்டோடீன் **b) சைகோடீன்** c) பாக்கிடீன் d) டிப்ளோடீன்


110. 2011 மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி மக்கள் அடர்த்தியில் முதலிடம் பெறும் மாநிலம்?
**a) பீகார்** b) மேற்கு வங்கம் c) கேரளா d) உத்திரப்பிரதேசம்

111. சரியான கூற்று எது?
1. லோக் சபா தலைவர் - ஓம் பிர்லா
2. தேசிய மகளிர் ஆணைய தலைவர் - ரேகா ஷர்மா
**a) 1, 2** b) 1 c) 2 d) எதுவுமில்லை

112. இந்திய நாடாளுமன்ற வரலாற்றில் ஜுலை 20, 2018 வரை எத்தனை நம்பிக்கையில்லா தீர்மானங்கள் கொண்டு வரப்பட்டுள்ளன?
a) 25 b) 26 c) 24 **d) 27**

113. சர்வதேச நட்புறவு தினம் கொண்டாடப்படுவது?
**a) ஜுலை 30** b) ஜுலை 29 c) ஜுலை 28 d) ஆகஸ்ட் 12

114. A, B, C, D, E, F மற்றும் G ஆகிய ஏழு பேரும் வட்ட வடிவில் அமர்ந்துள்ளனர். G என்பவர் C-க்கு இடதுபுறம் இரண்டாவதாக அமர்ந்துள்ளனர். C என்பவர் Fக்கு அருகில் இடதுபுறம் அமர்ந்துள்ளார். E என்பவருக்கு இடது புறம் 3-வது இடத்தில் A உள்ளார். D மற்றும் E-க்கு நடுவில் B உள்ளார் எனில் F என்பவர் அமர்ந்துள்ள இடத்தின் நிலை என்ன?
a) B-க்கு இடது புறம் 2-வதாக **b) D-க்கு வலதுபுறம் 4-வதாக**
c) C-க்கு இடதுபுறம் d) A மற்றும் E-க்கு நடுவில்

115. 


படத்தில் கொடுக்கப்பட்டுள்ள பகடைகளில் எண் 4-க்கு எதிரே உள்ள எண் எது?

a) 5 b) 3 c) 2 **d) 1**

116. 15 பேர் கொண்ட ஒரு குழுவில் 7 பேர் பிரெஞ்சும், 8 பேர் ஆங்கிலமும் பேசுகிறார்கள். 3 பேர் இரண்டில் எதுவும் பேசுவதில்லை எனில் இரண்டு மொழிகளும் பேசுபவர்கள் எத்தனை பேர்?

a) 0 b) 3 **c) 4** d) 5

117. ஒரு பண்ணையில் சில கோழிகளும், சில மாடுகளும் உள்ளன. அங்குள்ள கால்களின் எண்ணிக்கையானது தலைகளின் எண்ணிக்கையில் இரண்டு மடங்கினைக் காட்டிலும் 14 அதிகமாக உள்ளது எனில் அங்குள்ள மாடுகளின் எண்ணிக்கை யாது?

a) 5 **b) 7** c) 10 d) 12

118. சரியான இணை எது?

1. தேசிய பெண் குழந்தைகள் தினம் ஜனவரி - 24 2. தேசிய பெண்கள் தினம் பிப்ரவரி - 2

3. சர்வதேச பெண்கள் தினம் - மார்ச் 8 4. சர்வதேச விதவைகள் தினம் - ஜுன் 23

a) 1, 2 மட்டும் b) 1, 4 மட்டும் c) 1, 3, 4 மட்டும் **d) அனைத்தும்**

119. சரியான கூற்று எது?

1. கண்ணாடி வழியே பார்க்கும் போது நேரம் 8.30 மணி எனில் சரியான நேரம் 3.30 மணி

2. கண்ணாடி வழியே பார்க்கும் போது நேரம் 6.30 மணி எனில் சரியான நேரம் 5.30 மணி

3. கண்ணாடி வழியே பார்க்கும் போது நேரம் 3.15 எனில் சரியான நேரம் 8.45 மணி


4. கண்ணாடி வழியே பார்க்கும் போது நேரம் 2.45 எனில் சரியான நேரம் 9.15 மணி

a) 1, 2 b) 3, 4 c) 1, 2, 4 **d) அனைத்தும்**

120. ராகுல் ஒரு வரிசையில் மேலிருந்து 7-வது நபராகவும், கீழிலிருந்து 26-வது நபராகவும் இருக்கிறார் எனில் அவ்வரிசையில் மொத்த உள்ளவர்கள் எத்தனை?

a) 31 **b) 32** c) 33 d) 34

121. மருத்துவர்கள், பொறியாளர்கள், வழக்கறிஞர்கள் குறிக்கும் வென்படம்?




**a) 1** b) 2 c) 3 d) 4

122. X கதிர்களை பயன்படுத்தி தனிமங்களின் அணு எண்களை கண்டறிந்த இயற்பியல் வல்லுநர்?

a) ராண்ட்ஜன் b) மெண்டலீப்

**c) ஹென்றிஜின் ஜெப்ரிஸ் மோஸ்லே** d) அவகேட்ரா

123. தக்காளி சாறுவின் PH மதிப்பு?

a) 12 **b) 4.1** c) 7.4 d) 2

124. பாரீஸ் சாந்துவின் மூலக்கூறு வாய்ப்பாடு?

**a) $CaSo_4$ 1/2 $H_2O$** b) Ca $So_4H_2O$ c) CaO $Cl_2$ d) $NQHCo_3$

125. 1 கிராம் தங்கத்தை--------கிலோ மீட்டர் தூரத்திற்கு மெல்லிய கம்பியாக நீட்ட முடியும்?

a) 1 **b) 2** c) 3 d) எல்லை இல்லை

126. வைட்டமின் $B_{12}$ இல் உள்ள உலோகம்?

a) Fe b) Ca c) Mg **d) Co**

127. பொருத்துக?

a) 1907 - சூரத் - 1. வல்லபாய் படேல்
b) 1917 - கல்கத்தா - 2. சரோஜினி நாயுடு
c) 1925 - கான்பூர் - 3. அன்னிபெசண்ட்
d) 1931 - கராச்சி - 4. ராஷ்பிகாரி போஷ்

| | A | B | C | D |
|---|---|---|---|---|
| a | 4 | 2 | 3 | 1 |
| b | 3 | 4 | 1 | 2 |
| **c** | **4** | **3** | **2** | **1** |
| d | 3 | 2 | 1 | 4 |

123. 1935-ஆம் இந்திய அரசுச் சட்டத்தின் சிறப்பியல்புகளில் சரியானது எது?

1. மாகாணங்களில் தன்னாட்சி அறிமுகம், 2. மத்தியில் கூட்டாட்சி
3. மாகாணங்களில் இரட்டையாட்சிக்கு முடிவு, 4. ரிசர்வ் வங்கி நிறுவப்பட்டது

a) 1, 2, 3 b) 2, 3 c) 1, 3, 4 **d) அனைத்தும்**

124. திவாலாகிக் கொண்டிருக்கும் வங்கியின் பின்தேதியிட்ட காசோலை என்று காந்தி எதனை குறிப்பிட்டார்?

a) ஆகஸ்ட் அறிக்கை **b) கிரிப்ஸ் தூதுக்குழு**
c) பாகிஸ்தான் கோரிக்கை d) அமைச்சரவை தூதுக்குழு

125. கீழ்க்கண்டவற்றுள் சரியான கூற்றை தேர்வு செய்க?

1. 2-ஆம் உலகப் போரில் இந்தியர்களை கலந்தாலோசிக்காமல் போரில் ஈடுபடுத்தியதால் காங்கிரஸ் அரசு ராஜினாமா செய்தது
2. தேசிய அரசாங்கம் அமைக்கப்படுவது குறித்த பரிந்துரைகள் ஏதுமில்லாததால் ஆகஸ்ட் அறிக்கையை காங்கிரஸ் புறக்கணித்தது
3. இந்தியாவிற்கு முழு சுதந்திரம் வழங்குவது பற்றிய பரிந்துரைகள் இல்லாததால் கிரிப்ஸ் தூதுக்குழுவை காந்தி எதிர்த்தார்

a) 1, 2 b) 2, 3 c) 1, 2 **d) அனைத்தும்**

126. ஆங்கிலேயர்கள் இந்தியாவை விட்டு உடனடியாக வெளியேற வேண்டுமென தீர்மானம் நிறைவேற்றப்பட்டது எப்போது?

**a) 1942, ஆகஸ்ட் 8** b) 1939, டிசம்பர் 22
c) 1943, மார்ச் 7 d) 1945, நவம்பர் 12

127. கீழ்க்கண்டவற்றுள் சரியானது எது?

1. 1930-ல் முகமது இக்பால் வடமேற்கு எல்லை மாகாணங்களை இணைத்து முஸ்லீம்களுக்கு தனிநாடு வேண்டுமென பரிந்துரைத்தார்
2. பாகிஸ்தான் என்ற சொல்லை வழங்கியவர் சௌத்ரி ரகமத் அலி
3. 1940-லாகூர் முஸ்லிம் லீக் மாநாட்டில் ஜின்னா தனது இருநாடுகள் கொள்கையை வெளியிட்டார்
4. 1943 கராட்சி முஸ்லிம் லீக் மாநாட்டில் பிரித்துவிட்டு வெளியேறு என்ற முழக்கத்தை எழுப்பியவர்

a) 1, 4 b) 2, 3 c) 1, 2, 3 **d) அனைத்தும்**

128. ஜுன் -3 திட்டத்தைக் கொண்டு வந்தவர்?

a) வேவல் பிரபு **b) மௌண்ட் பேட்டன் பிரபு**
c) லின்லித்கோ பிரபு d) வெலிங்டன் பிரபு

129. பொருத்துக?

a) துர்கேச நந்தினி - 1. அபுல் கலாம் ஆசாத்
b) குலாம்கிரி - 2. குலாம் ஹுசைன்
c) இன்குலாப் - 3. ஜோதிபா பூலே
d) அல்ஹிலால் - 4. பக்கிம் சந்திர சாட்டர்ஜி

| | A | B | C | D |
|---|---|---|---|---|
| a | 4 | 2 | 3 | 1 |
| b | 3 | 4 | 1 | 2 |
| **c** | **4** | **3** | **2** | **1** |
| d | 3 | 2 | 1 | 4 |

130. சுதந்திரத்திற்குப் பின் இந்திய சமஸ்தானங்களை இந்தியாவுடன் இணைக்கும் பணியை மேற்கொண்டவர்?

a) B.R.அம்பேத்கர் b) இராஜேந்திர பிரசாத்
c) ராஜாஜி **d) சர்தார் வல்லபாய் படேல்**

**நன்கு தெரிந்த வினாக்களில் தவறுகளை தவிர்த்தால்**
**தேர்வுகளில் எப்போதும் வெற்றியே !**